**<u>செய்தி வெளியீடு</u>** **<u>நாள் : 16.09.2025</u>**

## <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வருகின்ற 23ஆம் தேதி சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டுள்ள ஷெனாய் நகர் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட 7 முடிவுற்றப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.</u>

## <u>மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு தகவல்</u>

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** 23.09.2025 அன்று திறந்து வைக்கப்படவுள்ள சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டுள்ள ஷெனாய் நகர் விளையாட்டுத் திடலை இன்று (16.09.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :**

அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி, ஷெனாய் நகரில் 5 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கின்ற இந்த விளையாட்டு மைதானத்தில் கால்பந்து, கூடைப்பந்து, கைப்பந்து, உடற்பயிற்சி கூடம் அடங்கிய விளையாட்டு மைதானத்தை இன்றைக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் இந்தப் பணியை எடுத்துக் கொண்டு, மாநகராட்சி ஒத்துழைப்புடன் வருகின்ற 23ஆம் தேதி இந்த ஷெனாய் நகர் விளையாட்டு மைதானம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** திருக்கரங்களால் திறப்பு விழா காண இருக்கின்றது. விளையாட்டு துறையில் **மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்** பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு அளவிற்கு மட்டுமில்லாமல் இந்திய அளவிற்கு விளையாட்டு துறையை திரும்பிப் பார்க்கும் அளவிற்கு தமிழகம் வளர்ந்து வருவதற்கு இது போன்ற கட்டமைப்புகள் அவசியம் என்பதற்காக இந்த ஷெனாய் நகர் விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல் மக்களுடைய பயன்பாட்டிற்கு பூங்காக்கள் என்று கோயம்பேடு சந்திப்பில் சுமார் ரூ.10 கோடி செலவில் ஓர் அழகிய நீரூற்று, சிறுவர்கள் விளையாடுகின்ற சறுக்கு விளையாட்டு போன்ற நடைபாதைகளுடன் கூடிய ஒரு பசுமை பூங்காவையும், அதேபோல் அதற்கு அருகாமையில் இருக்கின்ற சென்னை ராமாபுரத்தில் ரூ.7.32 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒரு அழகிய பூங்காவும், அதேபோல் சென்னை வேளச்சேரியில் ரூ.4.45 கோடி மதிப்பீட்டில் மேம்பாலத்திற்கு கீழ் உள்ள பகுதிகள் அழகுபடுத்துகின்ற பணிகளும், சென்னை, பம்மல் ஈஸ்வரி நகரில் ரூ.4.91 கோடி மதிப்பீட்டில் ஒரு விளையாட்டு திடலும், அதே போல் முடிச்சூரில் ரூ.3.85 கோடி மதிப்பீட்டில் இரங்கா குளம் மேம்படுத்தும் பணிகள், அதேபோல் சென்னை, தங்கசாலையில் 'முதல்வர் படைப்பகம்' என்று 7 திட்டங்களை இந்த இடத்திலிருந்து (ஷெனாய் நகர் விளையாட்டு மைதானம்) **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களுடைய பொற்கரங்களால் துவக்கப்பட இருக்கின்றது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 2025 செப்டம்பர் மாதத்திற்குள் ஒரு பகுதியாகவும், 2026 பிப்ரவரி மாதத்திற்குள் ஒரு பகுதியாகவும் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பதற்காக தான் தொடர்ந்து இது போன்ற கட்டமைப்பு

மேம்பாடுகள் நடைபெறுகின்ற இடத்தில் எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய மதிப்பிற்குரிய திருமதி.காகர்லா உஷா அவர்களும், பெருநகரத்தினுடைய ஆணையாளர் அன்பிற்கினிய திரு.குமரகுருபரன் அவர்களும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினுடைய உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.பிரகாஷ் அவர்களும் இந்த தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய அண்ணன் திரு.மோகன் அவர்களும், நம்முடைய திரு.கார்த்திக் அவர்களும் ஒருங்கிணைந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நிகழ்ச்சியில் சிறப்பு சேர்ப்பதற்காக இன்றைக்கு ஷெனாய் நகர் விளையாட்டு மைதானத்தை பார்வையிட்டு கலந்தாலோசித்து இருக்கின்றோம். வருகின்ற 23ஆம் தேதி சிறப்போடு பெருத்த மகிழ்ச்சியோடு இந்த கால்பந்து மைதானம் விளையாட்டு வீரர்களுக்கு ஒப்படைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு **மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.கே.மோகன், உள்ளாட்சிப் பிரதிநிதி திரு.கார்த்திக் மோகன், மண்டலக் குழுத்தலைவர் திரு.கூ.பீ.ஜெயின், தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ஏ.எஸ்.முருகன், மாநகராட்சி மற்றும் சிஎம்டிஏ அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™